charges regarding the work done by these officials. Will this Government give another list containing the remunerative charges which are debitable against them ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Ministers are not expected to reimburse the expenses incurred in their official capacity and the Ministers have chosen magnanimity and I expect hon. Members also to respond to that magnanimity instead of entering into peevishness.

*401 வினா—திரு. அ. பொ. அரசு : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் அன்னாரின் வீட்டிற்கு அரசினர் செலவில் ஏதேனும் மராமத்து செய்யப்பட்டதா, அல்லது மேசை, நாற்காலி, விரிப்புகள் போன்றவை அளிக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில் எந்தெந்த வருடங்களில் எவ்வளவு ரூபாய்க்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) சபைமுன் ஒரு விவர அறிக்கைa வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, as suggested by the Hon. Chief Minister, let us not enter into peevishness.

Baby Taxis

* 402 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to allow four passengers to travel by baby taxis ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, இந்த பேபி டாக்சிகளின் சொந்தக்காரர்கள் எல்லாம் குறிப்பிட்ட இலாக்கா அமைச்சர் அவர்களைப் பார்த்து "நான்கு பேர்களை ஏற்றச் சொல்வது சரியல்ல, அப்படி ஏற்றுவதன் காரணமாக அந்தக் கார்களின் ஜீவித காலம் குறைந்துவிடும், கார் பாகங்கள் சீக்கிரம் தேய்ந்துவிடும், ஆகவே நான்கு பேர்களை ஏற்றிக் கொண்டாகவேண்டும் என்கிற உத்தரவைப் போடக்கூடாது" என்பதாகத் தெரிவித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள்? அவற்றை எல்லாம் தேசீயமாக்கப் போகிறோம் என்பதாக மிரட்டுவதைவிட்டு, அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்குவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசீயமாக்குகிறோம் என்பது மிரட்டல் அல்ல. ஒரு காரில் எத்தனை பேர்கள் ஏற முடியும் என்று முதலாளிகள் சொல்வதைவிட, அந்தக் காரின் உற்பத்தியாளர் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதாகக் கருதித்தான் அரசு அவர்களிடம் கேட்டிருக்கிறது. ஒன்றிரண்டு நிர்வாகங்களிடம் இருந்து பதில் வந்து விட்டது. மற்ற பதில்களும் வந்த பிறகு அவைகள் பரிசீலிக்கப்பட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி இந்த அரசு ஆராயும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கார் சொந்தக்காரர்கள் குடும்ப சகிதமாக நீண்ட தூரம் போகும்போது எத்தனைபேர்கள் வேண்டுமானாலும் ஏற்றிக்கொள்கிறார்கள். அதிகப் பணம் கொடுப்பதாகச் சொன்னாலும்

a 668–669-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஏற்றிக்கொள்கிறார்கள். அப்போது எல்லாம் அதனுடைய ஆயுட்காலம் குறைந்து போவது இல்லையா? ஆகவே மூன்று பேர்கள் என்பதற்கு நான்கு பேர்களை ஏற்றிக்கொள்வதனால் அதன் ஆயுட்காலம் ஒன்றும் குறைந்து விடாது என்பதை அரசினர் உணர்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதைச் சிந்திக்க வேண்டியவர் திரு. விநாயகம் அவர்கள்.

திரு. நா. காசிராமன் : சர்க்கார் சொல்கிற பிரகாரம் இந்த டாக்சிகளில் நான்கு பேர்களை ஏற்றிக்கொள்வதற்கு அவர்கள் சம்மதித்தால் இப்போதுள்ள வரி விகிதத்தை, நான்குபேர்கள் ஏற்றப்படுகிறார்கள் என்பதற்காக இந்த அரசு அதிகப்படுத்தாமல் இருக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்குமேல் போட இப்போது உத்தேசம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : டாக்சியில் நான்கு பேர்கள் ஏற்றிக்கொள்வது என்பது ஒரு விஷயம். இதற்கு முன் இருந்த அரசு ஆட்டோ ரிக்ஷாக்களை கட்டுப்படுத்திற்று. அந்தக் கட்டுப்பாட்டை தளர்த்த இந்த அமைச்சரவை முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆட்டோ ரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில் பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. போலீஸ் தரப்பினர் அபிப்பிராயம் ஒரு வகையில் இருக்கிறது. இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் தெரிவிக்கிற அபிப்பிராயம் வேறாக இருக்கிறது. இவைகளைப் பற்றி இந்த அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. கே. விநாயகம் : ஒரு வேளை பேபி டாக்சியில் நான்கு பேர்கள் போகலாம் என்ற உத்தரவு வருகிறது என்று வைத்துக்கொண்டால் இப்போதுள்ள மீடர் ரேட்டை உயர்த்தாமல் பார்த்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு அங்கத்தினர் யோசனை யோசிக்கப்படும்.

Madras-Arkonam Railway line

* 403 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the electrification of Madras-Arkonam railway line stands ; and

(*b*) the steps taken by the State Government to hasten this scheme with Central Government ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) சென்னை-திருவள்ளூர் பிரிவுக்கு மின்சார இரயில் பாதை போடும் திட்டத்தையும் டீசல் ரயில் வண்டிகளை விடும் திட்டத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து ஆய்வு செய்யும் வேலையை இந்திய அரசின் ரயில்வே அமைச்சு மேற்கொண்டுள்ளது.

(இ) சென்னை-அரக்கோணம் மின்சார ரயில் பாதை போடும் திட்டத்துக்கு நான்காவது திட்டத்தில் முதலிடம் அளிக்கும்படி மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி வந்துள்ளது.

திரு. கே. விநாயகம் : சென்னையிலிருந்து அரக்கோணம் வரையிலும் மின்சார ரயில் போடுவதைப்பற்றி ஆராய்ந்து கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இது எத்தனை ஆண்டுகளுக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? இதை எப்பொழுது துவக்குவதாக இருக்கிறார்கள் ? நமது ஆட்சிக் காலத்திலேயே முடியும் என்று நினைக்கிறார்களா ?